ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் போட்டி

# ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்ப கல்லூரிக்கு 4-ம் இடம்

■ சென்னை

சாய்ராம் கல்லூரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

'ஸ்மார்ட் இந்தியா ஹெக்கத்தான் 2018' போட்டி மத்திய அரசால் நடத்தப்படும் போட்டி யாகும். மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் உள்ள ஸ்ரீ ராம்தே பாபா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இந்த போட்டியில் மொத்தம் 42 அணிகள் பங்கேற்றன.

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் கீழ், சாலை பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாணும் பணியில் ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்ப கல்லூரியின் மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவைச் சேர்ந்த 6 மாணவர்கள், 2 வழிகாட்டிகள் 'ஹேக்கர் எக்ஸ்' என்ற பெயரில் பங்கேற்றனர்.

தொடர்ச்சியாக 36 மணி நேரம் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்ரீ சாய்ராம் அணி 4-ம் இடம் பெற்றது. மேலும் மகாராஷ்டிர அரசு வழங்கிய ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசையும் வென்றது.

வெற்றிபெற்ற அணியினரை கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து, முதல்வர் கே.பழனி குமார், துறைத் தலைவர் ஜி. தாமரை செல்வி ஆகியோர் பாராட்டினர்.

10/4/18
Page No-3
தி. இந்து.